Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி01 (17-08-1991) சனிக்கிழமை ஓசை: 180

## வர்த்தகர் ஊழியர் சங்க தீர்மானம்மாற்றமில்லை

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய வர்த்தகர் ஊழியர் சங்கத்தின் வழமையான தீர்மானங்களின்படி சனிக்கிழமைகளில் சகல வர்த்தக ஸ்தாபனங்களும்மாலை 2.00 மணியுடன் மூடப்பட வேண்டும் என்று அதன் பொதுச் செயலாளர் சிவகுமார் அறிவித்துள்ளார்.

யாழ். வர்த்தகர் சங்கத் (4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். செயலகம் முன்னால் மறியல்

# அரச அலுவலகள் ஸ்தம்பிதம்

## யாழ் அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

(நமது நிருபர்கள்)

அரசினால் நிவாரணம நிறுத்தப்பட்டதைக் கண்டித்து யாழ். அரச செயலகத்தின் முன்னால் நேற்று மாபெரும் மறியல் போராட்டம் நடைபெற்றது. கோஷங்களை எழுப்பியவாறு ஆயிரக்கணக்கான மக்கள் செயலக வளவை காலை 7 மணியிலிருந்து சுற்றி வளைத்து நின்றனர். சுமார் ஐந்து மணிநேரமாகச் செயலக அதிகாரிகளின் அலுவல்கள் ஸ்தம்பிதமடைந்தன.

சிறிலங்கா அரசு இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வந்த நிவாரணத்தை திடீரென நிறுத்துவதாக அறிவித்ததும் இதனைத்தொடர்ந்து தமிழர் நலன் காக்கும் ஒன்றியம் இந்த அநியாயமான பழிவாங்கல் குறித்து கண்டனம் தெரிவித்ததுடன் இதற்கு எதிராக மறியல் போர் ஒன்று நடத்துவதற்கு அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதன் பிரகாரம் நேற்று அதிகாலை ஏழு முப்பது மணிக்கெல்லாம் யாழ். அரச செயலகத்தின் முன்னால் மக்கள் அணிதிரள ஆரம்பித்தனர்.

காலை செயலக வளவை கூட்டுவதற்கு வந்த தொழிலாளி முதல் யாழ் அரசஅதிபர் வரை எவரையும் உள்ளே (4ஆம் பக்கம் பார்க்க)

## "உரியதைக் கொடு இன்றேல் பிரிகிறோம் விடு"

(யாழ்ப்பாணம்)

உரியதைக்கொடு இன்றேல் பிரிகிறோம் விடு! பாதிக்கப்படுவது நாங்கள் நிவாரணம் பெறுவது சிங்களவரா? நிவாரணம் நிறுத்தும் தந்திரம் தமிழரை அழிக்கும் மந்திரம் தமிழன் குளித்தால் சிங்களம் தேயுமா? மருந்துகளைத் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

## கோவிந்தன், சுபராஜ், லெப். தாசன்

(நமது நிருபர்)

ஆனையிறவுப் பெரும் போரில் வீரமரணமடைந்த மேலும் மூன்று போராளிகளின் விபரம் வருமாறு: கோவிந்தன் (நடராசா சீதகுமார் முடங்கல் தோட்டம் அல்வாய் தெற்கு) என்பவர் 18-07-91 அன்று கட்டைக்காட்டுப் பகுதியில் நடந்த மோதலிலும், சுபாராஜ்(செல்லத்துரை தேவன் 6ஆம் வட்டாரம் வேலணை மேற்கு) என்பவர் 28-07-91 அன்று கட்டைச்காட்டில் நடந்த மோதலிலும். லெப். தாசன் (அன்ரனிதாசன் தேவலிங்கம் மயிலிட்டி)என்பவர் 30-07-91 அன்று புல்லாவெளியில் நடந்த மோதலிலும் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ஒரு அதிகாரியும் ஒருசிப்பாயும் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளுடன் இடம்பெற்ற மோதல் ஒன்றில் ஒரு சிப்பாயும், மன்னார் மாவட்டத்தில் ஒரு அதிகாரியும் கொல்லப்பட்டதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## ராணுவ வாகனம் மோதி ஒருவர் காயம்

(வவுனியா)

வவுனியாவில் குடும்பஸ்தர் ஒருவர் மீது இராணுவ வாகனம் ஒன்று மோதியதில் அவர் படுகாயங்களுக்குள்ளானார்.

கடந்த 13 ஆம் திகதி வவுனியா நகர்ப் பகுதியிலிருந்து சைக்கிளில் வந்துகொண்டிரு (4ஆம் பக்கம் பார்க்க)

## ஓகஸ்ட் 20இல் ஓமந்தையில் மாபெருங் கண்டனப் பேரணி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவும், இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைகளை கண்டிக்கு முகமாகவும் எதிர்வரும் ஆகஸ்ட் 20 ஆம் திகதி வவுனியா வெகுஜன ஒன்றியத்தினால், மாபெரும் கண்டன பேரணியும், பொதுக்கூட்டமும் நடாத்தப்பட உள்ளன.

வவுனியா மாவட்டத்தில் பூவரசன்குளம் பகுதியிலும், (4 ஆம் பக்கம் பார்க்க)

## கைது செய்யப்பட்ட சிப்பாயை விடுவிக்கப் புலிகள் நிபந்தனை

- ஹமில்ரன்

(கொழும்பு)

ஆனையிறவுப் போரில் தம்மால கைது செய்யப்பட்ட கே. எல். உபாலி என்னும் இராணுவச் சிப்பாயை விடுவிக்க 1989 ஆம் ஆண்டுமுதல் சிறிலங்காப் பொலிஸாரால் சிறை வைக்கப்பட்டிருக்கும் தமது தரப்பினர் ஒருவரை விடுவிக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரியிருப்பதாகச் சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்ரன் வனசிங்கா 'த ஐலண்ட்' பத்திரிகைக்குத் தகவல் அளித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக கூறிய ஹமில்ரன் வனசிங்கா அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் கொலைவழக்கில் சம்பந்தப்பட்டவரையே விடுவிக்க புலிகள் கோருகின்றனர் என்றும், இக்கைதிகள் பரிமாற்றம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் கண்காணிக்கப்படவேண்டும் என்றும் கோரியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனையிறவுப் போரில் காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட கே. எல். உபாலி ஜிந்தோட்டையிலுள்ள தனது (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலுக்கு இரு ரெலோ பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி என்னும் இடத்தில் ரெலோ இயக்கக் குழுவினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமைமாலை 4 30 மணியளவில் நடாத்தப் (4ஆம் பக்கம் பார்க்க)

## விமானபடையை சேர்ந்தவர் புலிகளால் கடத்தப்பட்டார்?

(பொலநறுவை)

விமானப் படையைச் சேர்ந்த கே. ஜி. ரஞ்சித் அபயசேகரா புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

பலாலி முகாமில் இருந்து விடுமுறையைக் கழிக்க ஊருக்கு வந்திருந்தார். இவர் பொலநறுவை புதிய நகரத்தைச் சேர்ந்தவர்.

ஞாயிறன்று விடுமுறையில் வந்தவரைத் திங்கள் முதல் காணவில்லை என்று பொலி (4 ஆம் பக்கம் பார்க்க)

## $1\frac{1}{2}$மாத இடைவெளியின் பின் மடு முகாமிற்கு லொறிகள்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் மடு அகதி முகாமுக்கு பதினெட்டு லொறிகளில்உணவுப் பொருள்களைஎடுத்துச் சென்றுள்ளது.

ஒன்றரை மாத காலமாக முகாமுக்கு உணவுப் பொருள்களை கொண்டு செல்ல கூட்டுப்படை தலைமையகம் அனுமதி மறுத்திருந்தது தெரிந்ததே. இதனால் இம்முகாமில் தங்கியுள்ள முப்பதினாயிரம் அகதிகள் பட்டினிச் சாவை எதிர் நோக்கியிருந்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிள் வியாபாரிகள் பொருள்எடுத்துவர அனுமதி

(வவுனியா)

வவுனியா நகர்ப்புறக் கடைகளிலிருந்து சைக்கிள்கள்மூலம் அரிசி, மா, சீனி போன்ற பொருள்கள் தலா ஒவ்வொரு மூடை கொண்டு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி சிறிலங்கா இராணுவ அதிகாரிகளினால் இந்த அனுமதி சம்பந்தமான அறிவிப்பு வழங்கப்பட்டதை அடுத்து தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக பல சைக்கிள் வியாபாரிகள் மேற்படி உண (4ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணிக்கும் - ஆனையிறவிற்கும் இடையில்

# இராணுவம் மீது தாக்குதல்; பல படை பலி; வாகனம் நாசம்

(ஆனையிறவு)

ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்காஇராணுவத்தினரின் வாகனம் ஒன்று தீப்பற்றி எரிந்தது. அதில் பயணம் செய்த சகல படையினரும் கொல்லப்பட்டனர்.

இச் சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது: நேற்றுக்காலை 8-30 மணியளவில் ஆனையிறவுக்கும் வெற்றிலைக்கேணிக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பிரச்சினைகளில் அதிகாரப் பரவலாக்கல் ஒன்றே எஞ்சியுள்ளது

- பிரேமதாச

(பதுளை)

வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கிய மொழி மற்றும் வேலைவாய்ப்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எஞ்சி (4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

## விஞ்ஞானபீட இரண்டாவது அரையாண்டுப் பரீட்சைகள் 1990

1990 ஆம் ஆண்டிற்குரிய இரண்டாவது அரையாண்டுப் பரீட்சை 14-10-91 இல் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 15-09-1991 இற்கு முன்பாக யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் விண்ணப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களைப் பரீட்சைக்கிளைப் பிரதிப் பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ.மீ. X 10 செ.மீ அளவுடைய கடிதவுறையை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

- பதிவாளர்

( /2958)

## THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR BIOTECHNOLOGY

*Graduates / Postgraduates are requested to apply for the above fellowship giving their biodata and research proposal in plant tissue culture and genetic engineering. The fellowship will be awarded to the most suitable applicant after an interview. Monthly allowance of Rs. 2,500/- shall be paid.*

*The duration for this fellowship shall be one year and could be extended by reapplying for the fellowship. The fellowship may be terminated at any time if the project is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory.*

*The closing date for applications will be on 30-09-1991.*

**REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA.**

(B-2957)

## வரி விளம்பரம்

### தேவை

குரக்கன் ஒட்டு தேவை. மில்க்வைற் யாழ்ப்பாணம். B/2956

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை, மில்க்வைற், யாழ்ப்பாணம். B/2953

### தவறிவிட்டது

16-08-91 நேற்று கச்சேரிக்கும் நல்லூருக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (R/1648)

## கிரானில் தமிழர் கொலை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும் இராணுவத்தின் கொலைகளின் தொடராக கடந்த 13 ஆம் திகதி செட்டிபாளையம் இராணுவமுகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் கிரான் குளத்தில் ஒருவரை சுட்டுக் கொன்றுவிட்டு பின்னர் அவரை எரித்தும் விட்டனர்

இச்சம்பவம் அதிகாலை ஆறு முப்பது மணியளவில் இடம் பெற்றது. கொல்லப்பட்டவரின் பெயர் முருகுப்பிள்ளை இவர் 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவராவார்.

## முகாமைத்துவ பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள கொத்தணி அதிபர்களுக்கான வதிவிட முகாமைத்துவ பயிற்சிநெறி ஒன்றை யாழ். கல்வித்திணைக்கள முகாமைத்துவ நிலையம் ஏற்பாடு செய்துள்ளது.

வரும் 19 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை யாழ். இந்துக் கல்லூரியில் இப் பயிற்சிநெறி நடைபெறும். புதிதாக இலங்கை கல்வி நிர்வாக சேவையில் அமர்த்தப்பட்டவர்கள் உட்பட அனைத்து கொத்தணி அதிபர்களும் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)

## அறிவித்தல்

கடை உரிமையாளர்கள் சனிக்கிழமையும் மாலை 6.00 மணிவரை ஸ்தாபனங்களை திறந்து வியாபாரம் செய்யலாம் என்பதை அறியத் தருகிறோம்.

திரு சி. நமசிவாயம்
பொதுச் செயலாளர்

யாழ். வர்த்தகர் சங்கம்
யாழ்ப்பாணம்

(R/1645)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1991-08-18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தலைவர் பேராசிரியர் திரு அ. துரைராசா அவர்கள் தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளதென்பதை இக் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

சி. கனகசபாபதி
செயலாளர்

(R/1642)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை அன்ரன்
(செ. மகேந்திரா)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 22-08-1967 | 17-08-1989 |

ஆண்டிரண்டு உருண்டோடியது - அன்ரனே
உன் நினைவலைகள் மட்டும் நீங்கவில்லை
அந்நியப் படையை எதிர்த்து களம் நின்று
நிரமுடன் போராடி வீரமுடன் மரணித்தாய்.

நான் மரணித்தாலும் என் நண்பர்களுக்கு
உதவுங்கள் என்று நீயும் வரைந்திருந்தாய்
உன் நண்பர்களின் வதனத்திலே நாம்
உன்னைக் காண்கின்றோம்.

பந்தபாசங்களை மறந்து இளவயதின்
சுகபோகங்களைத் துறந்து
களத்தினிலே போராடும் வேங்கைகளின்
இலட்சியம் ஈடேற பிரார்த்திக்கின்றோம்

**அம்மா, அக்கா, தாத்தா,
ஆச்சி, மாமியார், நண்பர்கள்,
உறவினர்கள்.**

(B/2911)

## நினைவு கூருகின்றோம்...



**1991 - 08 - 17**

**லெப். வவி**

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை, துவரங்காட்டுப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மற்றும் ஊர்காவற் படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது படுகொலை செய்யப்பட்ட 24 தமிழர்கள்

1986ஆம் ஆண்டு மன்னார், தள்ளாடிச் சந்தியில் சிறிலங்காப் படையினரால் சிற்றூர்தியிலிருந்து இறக்கப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டபின் காணாமற் போன எமது ஆதரவாளர் குஞ்சு (கனகரத்தினம் சதானந்தன் - புத்துவெட்டுவான்) உட்பட 4 தமிழ் இளைஞர்கள்

1989 ஆம் ஆண்டு பளை, வேம்பொடு கேணிப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**கப்டன் சிவா** (கணபதிப்பிள்ளை செல்லத்துரை - கிளாலி)

இதே சம்பவத்தில் காயமுற்ற நிலையில் சயனைற் உட்கொண்டு வீரமரணமெய்திய

**அன்ரன்** (செந்தில்நாயகம் மகேந்திரராசா - கோப்பாய்)

முல்லைத்தீவு, நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழ்க் குழந்தைகள்

வதிரிச் சந்தியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இமையாணனைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

மாத்தளையில் ஜே.வி.பி. இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உக்குவலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

1990 ஆம் ஆண்டு நல்லூரில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரமரணமெய்திய

**லெப். வவி** (சுப்பிரமணியம் சிவராசா - புற்றளை, பருத்தித்துறை)

அம்பாறை, வீரமுனைக் கிராமத்தில் சிறிலங்கா ஊர்காவற் படையினர் மற்றும் ஜிகாத் குழுவினரால் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட 97 தமிழர்கள்

இயக்கச்சியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

எழுதுமட்டுவாழில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட யாழ். திருக்குடும்ப கன்னியர்மட வித்தியாலய மாணவி, அவரது சகோதரியான மற்றுமொரு இளம் பெண்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(B/2942)

ஃ சிந்தனைக்கு ஃ

செயல் மறக்கப்படலாம்; ஆனால்,
அதன் விளைவு தொடர்கிறது.

— ஒவிட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 17-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

# தரவேண்டியது அதிகம் கேட்பது சொற்பம்

நிறுத்தப்பட்ட நிவாரணம் வழங்கக்கோரி வடக்கில் பெரும் மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ளன. முல்லைத்தீவில் நேற்று முன்தினம் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது. நேற்று ஆயிரக்கணக்கில் மக்கள் பங்கேற்ற மறியல் போராட்டம் யாழ். செயலகத்தின் முன் நடைபெற்றது. இப்போராட்டத்தில் சமூகசேவை தொண்டர் ஸ்தாபனங்கள், பொது ஸ்தாபனங்கள், சங்கங்கள் தொழிற்சங்கங்கள் என்பனவும் பங்கேற்றன.

அத்தோடு பல்வேறு அரச, தனியார் நிறுவனங்களில் இருந்தும் நிவாரண நடவடிக்கைகளைத் தொடருமாறும் சிறிலங்கா ஜனாதிபதிக்குக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் வடக்கு கிழக்கின் நிலைமை தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு மக்கள் முகாம்களில் வாழாமைக்கு முகாம்களில் உள்ள நெருக்கடியே காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

அதேவேளை நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் என அரச அதிகாரிகள் விடுத்த கோரிக்கைகளை சிறிலங்கா ஜனாதிபதி நிராகரித்துள்ளார். ஆனால் இது பற்றி மீள்பரிசிலனை செய்வதாக புனர்வாழ்வு. புனர்நிர்மாண அமைச்சு ஒப்புக்குத் தெரிவித்துள்ளது

இந்நிலையில் கோரிக்கைகள் போராட்டமாக மாறி இரண்டாம் கட்டத்தை அடைகின்றது. மக்களின் கருத்தை அரச அதிகாரிகள். நிறுவனங்கள் என்பன பிரதிபலித்ததை சிறிலங்கா அரசாங்கம் ஏற்க மறுத்ததினால் மக்கள் நேரடியாகப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் மக்கள் சோம்பேறித்தனமாக இருந்து நிவாரண உதவி கோரவில்லை. தமது உடைமைகளையும், தொழில்களையும் இழந்தவர்களே நிவாரணம் கோருகின்றனர். இதற்குச் சிறிலங்கா அரசாங்கமே காரணம் இதனால் இதற்குரிய நிவாரணமும் சிறிலங்கா அரசாங்கமே வழங்கவேண்டும்.

தமிழர் பிரதேசங்கள் மீது சிறிலங்கா இராணுவத்தைக் கட்டவிழ்த்துவிட்டு மக்களை அகதிகளாக்கியது சிறிலங்கா அரசாங்கம். மக்கள் தமது சொத்துக்களை இழந்து, சொந்த இடத்தைவிட்டு வெளியேறினர். அவர்களது பொருளாதார நடவடிக்கைகள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன.

அதேவேளை தொழில் நடவடிக்கைகள் திட்டமிட்ட பொருளாதார தடை நடவடிக்கைகளின் மூலமும் முடக்கப்பட்டன. மக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டனர். இவ்வாறாக தமிழ் மக்கள் சிறிலங்கா அரசாங்கத்தினால் தமக்கு இழைக்கப்பட்ட அநீதியில் இருந்து தாம் தப்பி உயிர் வாழ்வதற்கே நிவாரணம் கேட்கின்றார்கள்.

சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரண நடவடிக்கைகளின் அளவோ மிகப் பெரிது. 1956 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் இருந்து திட்டமிட்டு தொடர்ச்சியாக அழித்துவந்த தமிழர் சொத்துக்களுக்கும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திற்கும் தமிழர் உயிர்களுக்கும் சிறிலங்கா அரசாங்கம் நஷ்டஈடும், நிவாரணமும் வழங்கியாக வேண்டும். ஆனால் தமிழர் தற்பொழுது அதைக் கேட்கவில்லை.

அத்தோடு முழுமையாக சிறிலங்காவின் சொந்தப் பணத்தில் இருந்தும் வழங்குமாறும் கேட்கவில்லை. இலங்கை மக்களின் ஒரு பகுதியினரின் சொத்தில் இருந்தும், வடக்கு கிழக்கு நெருக்கடியின் பெயராலும், புனர்வாழ்வு நடவடிக்கை என்ற ரீதியிலும் உலக நாடுகளிடம் இருந்தும், மனித நேய ஸ்தாபனங்களிடம் இருந்தும் பெறப்பட்ட நிதியில் இருந்தும், பொருள்களில் இருந்தும் வழங்குமாறு கேட்கின்றார்கள்.

இன்று தமிழர் கேட்கும் நிவாரணமோ மிகவும் சொற்பம். அதுவும் அன்றாடம் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களே கோரப்படுகின்றன. இதனை வழங்குவதற்கு இதற்குக் காரணமாக இருந்த சிறிலங்கா அரசாங்கத்தின் பொறுப்பும், கடமையுமாகும். இதனைச் சிறிலங்கா அரசாங்கம் தட்டிக் கழிக்க முற்படுமானால் வடக்கு - கிழக்கின் நிர்வாகத்தில் நூலிழையில் கொண்டுள்ள தொடர்பையும் இழக்கவேண்டி ஏறபட்டு விடலாம்.

# ஊரெல்லாம் போராளியானால் வெற்றி நிச்சயமே - ஆஞ்சநேயர்

(நமது நிருபர்)

ஆனையிறவு முகாமை அழித்து வெற்றியீட்டுவது மக்களாகிய நீங்கள் தரும் ஆட்பலத்திலேயே தங்கியுள்ளது. ஒருகாலத்தில் எமது மக்களையும் தேசத்தை விடுவிக்கும் போராளிகளையும் எதிரி தேடி அழித்தான். ஆனால் இன்றுஎமதுமண்ணை ஆக்கிரமித்து அமைத்து நிற்கும் தளத்தையும் அதன் சிப்பாய்களையும் பாதுகாக்க முடியாத நிலையில் சிறிலங்கா அரசு இருக்கிறது. கடந்த ஒரு வருடமாக எமது முற்றுகையில் இருந்த இம் முகாம் மீதுகடந்தமாதம்10ஆம் திகதி முதல் தாக்குதலை மேற்கொண்டு வருகிறோம். இம் முகாமை தொடர்ந்து சுற்றி நிற்போமானால் நாளாந்தம் இரு போராளிகளை இழப்போம். ஆனால் எம்மால் எதிரிக்கு அழிவை ஏற்படுத்தாதுநாம் வெற்றியும்பெறாது இழப்பை சந்திக்க வேண்டி வரும். இத்தள யுத்தத்தில் எதிரிக்கு எந்தளவு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் விடுதலைப் புலிகளுக்கு எந்தளவு வளர்ச்சியும் அனுபவமும் ஏற்பட்டுள்ளது என்பதையும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு கடந்த 14ஆம் திகதி புங்குடுதீவு நுணுக்கல் வெளி மைதானத்தில் நடந்த போர்க்காலக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது யாழ். மாவட்ட மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இந்த யுத்தத்தில் தங்களுக்கு வந்த பெரும் அழிவிலிருந்து தாம் தப்பிவிட்டோம் என எதிரி புன்னகைக்கின்றான். ஆனால் இத்தளத்திலிருந்த ஆயுதங்களை எடுக்கவும் புலிக்கொடியைப் பறக்கவிடவும் முடியவில்லை என்பதே எமது ஏக்கம்.

களத்தில் நடந்த மோதலில் யுத்தம் புரிந்த ஒரு பெண் போராளியின் இடது கண்ணில் ரவை பாய்ந்து இரத்தம் கொப்பளித்துக்கொண்டிருந்த நிலையிலும் ஒருகையால் கண்ணைப் பொத்திக் கொண்டு எதிரியை நோக்கித் துப்பாக்கியை இயக்கிய வண்ணம் இருந்தார். இவரை தூக்க சென்றபோது கூட வர மறுத்து நின்று போராடினார். இது போன்ற எத்தனையோ சம்பவங்கள் ஆனையிறவுக் களத்திலே நிகழ்ந்தன.

ஊருக்கு இரண்டு மூன்று போராளிகள் நின்றுதான் இந்தச் சரித்திரம் படைக்கப்படுகிறது. இவ் வேளையில் ஊரெல்லாம் போராளிகளானால் வெற்றி என்பது நிச்சயமே. எனவே வீட்டுக்கு ஒருவர் ஆயுதம் ஏந்த வேண்டும். நெருங்கிக் கொண்டிருக்கும் திலீபனின் நான்காம் ஆண்டு நினைவு நாளில் மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்ற அவரது கூற்றை நிதர்சனமாக்க அன்றைய தினம் புலிகளும் மக்களும் சேர்ந்து மக்கள் புரட்சி வெடிக்கிறது. தமிழ் மக்கள் கண்கள் சிவக்கிறது. நீ கண்மூடும் போது கண்ட கனவு நனவாகி கண் முன்னே தெரிகிறது பார் திலீபா பார் எனச் சொல்லுவோம் என அறை கூவினார்.

# பிரகடனப்படுத்தாத பணத்திற்கு வரிச்சலுகை

(கொழும்பு)

இதுவரை பிரகடனம் செய்யப்படாத பணத்தை கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்த விரும்புவோருக்கு வரிச்சலுகை வழங்க அரசு முன் வந்துள்ளது.

ஜனாதிபதிபிரேமதாசாவின் யோசனைக்கு இசைவாக சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் இம் முடிவு வீடுகளைக் கொள்வனவு செய்யவிரும்புவோருக்கும்,வர்த்தக ஸ்தாபனங்கள் திருத்த விரும்புவோருக்கும் பொருந்தும் என்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும்வரும்அக்டோபர்முதல் தேதி முதல் 1994-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம்திகதி வரை அமுல் செய்யப்படவிருக்கும் இவ் வரிச்சலுகையை பயன்படுத்த விரும்புவோருக்கு வரி நிலுவை, வழக்குத் தொடர்தல் அபராதம் என்பவற்றிலிருந்தும் விலக்கு அளிக்கப் படவுள்ளது.

## ஆந்திராவில்

# 27 'தாழ்த்தப்பட்டோர்' அடித்துக் கொலை

டில்லி)

ஆந்திர மாநிலத்தில்'தாழ்த்தப்பட்ட' வகுப்பைச் சேர்ந்த ஆண், பெண், குழந்தைகள் உட்பட இருபத்தேழு பேர் அடித்துக்கொலை செய்யப்பட்டுநீர்ப்பாசனவாய்க்காலில் தூக்கி எறியப்பட்டுள்ளனர். அண்மையில் நடந்த இச்சம்பவத்தைக் கண்டித்தும், தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக நடைபெறும் வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்தும் புதுடில்லியிலுள்ள உள்துறை அமைச்சரகத்தை நோக்கி பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தியுள்ளனர். இதில் ஐம்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாகப் பாராளுமன்றத்தில் பேசிய சமூகநலத்துறை அமைச்சர் சீத்தாராம் கேசரி நானூறு வருடங்களுக்கும் மேலான இந்திய சமூக அமைப்பில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டதுடன், தாழ்த்தப்பட்டோர் நலனைக் கண்காணிக்கப்பிரத்தியேக அவதான நிலையம் ஏற்படுத்தப்படும் என்றார்.

# தமிழ்க் காசுக்கட்டளைக்கு பணம் வழங்க மறுப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலையிலிருந்து கொழும்பு நாவலவிலுள்ள ஒருவருக்கு தமிழில் எழுதப்பட்டு அனுப்பப்பட்ட மணியோடரை நாவலவிலுள்ள தபாற்கந்தோர் அதிகாரிகள் மாற்றிக் கொடுக்க மறுத்துவிட்டனர்.

சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் எழுதி வரும் மணியோடர்களே இங்கு மாற்றிக் கொடுக்கப்படும் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழும் அரச கருமமொழி என்று சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# குடியேற்றத்தைகட்டுப்படுத்த அவுஸ்திரேலியா முயற்சி

(கன்பரா)

அவுஸ்திரேலியா, தனது நாட்டில் குடியேறியுள்ள இனங்களின் நலன்கள், சேவைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு குடியேற்றத்தினை கட்டுப்படுத்தக் கூடுமென அவுஸ்திரேலிய குடி வரவு அமைச்சர் ஹெரிகான்ட் தெரிவித்துள்ளார்,

குடியேற்றத்தினைக் கட்டுப்படுத்தவோ அல்லது அதிகரிக்கவோ தேவை இருக்கின்றதென்பதை நாம் கண்டுகொண்டால் அதைச் செய்வதற்குத் தயங்க மாட்டேன் எனவும் கான்ட் தெரிவித்தார்.

நாட்டின் பின்தங்கிய பொருளாதார நிலையைக் கருத்திற்கொண்டு நாம் இந்த வருட குடிவரவினை 15,000 ஆக குறைத்துள்ளோம் என்றும், அவர் தெரிவித்தார்.

# வவுனியாவில் இருவர்த்தகர்கள் கைது

[வவுனியா)

வவுனியாவில் இருவர்த்தகர்கள் விசாரணைக்காக சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் கைதானவர்கள் கொடுத்த தகவல்களின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொக்கட்டிச்சோலையில்

# 67 பேர் கொல்லப்பட்டனர் 56 பேரைக் காணவில்லை

-மட்டு. அரச அதிபர்

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச் சோலை படுகொலைச் சம்பவத்தின் போது 67 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 56 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்புக்கு வருகை தந்த சிறிலங்கா பாராளுமன்ற எதிர்க்கட்சி குழுவினரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றிலேயே இப் புள்ளி விபரங்களை அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தில் 49 பேர் காயமடைந்துள்ளனர் என்றும், 141 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன என்றும், 343 வீடுகள் பகுதி சேதமடைந்தன என்றும், 600 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 8029 குடும்பங்களைச் சேர்ந்த 34,721 பேர் அகதிமுகாம்களில் வாழ்கின்றனர். 10,520 குடும்பங்களைச் சேர்ந்த 44.631பேர் நண்பர், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

மூன்றாம் உலக நாடுகளில்

# நாசகார வேலைகளில் அ.சார்பற்ற நிறுவனங்கள்

மலேசியப் பிரதமர்

(கோலாலம்பூர்)

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சமநிலையை நாச வேலைகள் மூலம் அழிக்கும் பணிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களை மேற்கு நாடுகள் பயன்படுத்துகின்றன என்று மலேசியப் பிரதமர் எம். முகமெட் மேற்கு நாடுகளைச் சாடியுள்ளார்.

கடந்த திங்களன்று கோலாலம்பூரில் ராஜதந்திரிகள் பயிற்சி மையத்தை ஆரம்பித்து வைத்துப்பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்கு நாடுகளின் பொருளாதாரத்திற்கு சவாலாக அமையும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சட்ட ஒழுங்குகளைத் தகர்ப்பதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் அக்கறை கொண்டுள்ளன என்றார் அவர். வளர்ச்சி அடைந்துள்ள மேற்கு நாடுகளின் பொருளாதார வளர்ச்சிகளைப் பாதுகாப்பதே அரச சார்பற்ற நிறுவனங்களின் நோக்கம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

குடியேற்றங்களை இழந்துள்ள அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் பொருளாதார உதவியை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி மீளவும் குடியேற்றங்களை அமைக்க முயல்கின்றன என்றார் அவர்

# அமைச்சர் சிதம்பரம் மீது அ. தி. மு. க. தொண்டர் தாக்கு

(சென்னை)

மத்திய வர்த்தக இணை அமைச்சர் ப. சிதம்பரம் திருச்சி-புதுக்கோட்டை வழியில் சென்று கொண்டிருந்தபோது நேற்றுப் பிற்பகல் அ இ. அ. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டினர். அத்துடன் தக்காளிப் பழங்களையும், திராவகம் நிரப்பப்பட்ட முட்டைகளையும் அவர் பிரயாணம் செய்த கார் மீது வீசினார்கள். இச்சம்பவம் குண்டூர்க் கிராமத்தில் இடம் பெற்றது.

அவரது காரின் கண்ணாடிகளும் மற்றும் இந்திரா காங்கிரஸ் பிரமுகர்களின் கார்களின் கண்ணாடிகளும் நொருங்கிப் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சருக்கும், திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலதாசுக்கும் புதுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் பி. எம். சுந்தருக்கும் இந்தச் சம்பவத்தில் இலேசான காயங்கள் ஏற்பட்டன.

அ இ. தி. முன்னேற்றக் கழகத்தினரின் வன்முறையைக் கட்டுப்படுத்த காவற்துறையினர் தவறிவிட்டார்கள் என்று கோரி அமைச்சர் சிதம்பரமும், இந்திரா காங்கிரஸ் தொண்டர்களும் வீதியின் நடுவே நின்றனர். இதனால் வீதிப்போக்கு வரத்து சுமார் இரண்டு மணிநேரம் தடைப்பட்டது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவரும், பொலிஸ் அதிகாரிகளும் அவ்விடத்துக்கு விரைந்து தலையிட்டதன் பேரில் மத்திய அமைச்சரும், இந்திரா காங்கிரஸ் தொண்டர்களும் அங்கிருந்து பிரயாணத்தைத் தொடர்ந்தனர்.

# மூன்றாவது போராளியாக மகளை அனுப்பியபெற்றோர்

(நமது நிருபர்

போர்க்காலக் கருத்தரங்கின் முடிவில் தமது புதல்வியை விடுதலைப் புலிகளிடம் பெற்றோர் ஒப்படைத்த நிகழ்ச்சி நேற்று மாலை அரியாலை பூம்புகார் பகுதியில் இடம்பெற்றது.

பொ. முருகேசு-அமிர்தலட்சுமி தம்பதிகள் தமது புதல்வி றஜிதாவை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை அவர்களிடம் ஒப்படைத்தனர். இத்தம்பதிகளின் புதல்வர்களான புவி, அர்ஜுன் ஆகியோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராளிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் நேற்று மாலை பூம்புகார்ப் பகுதியில் நடைபெற்ற கருத்தரங்கைத் தொடர்ந்து சுமார் பத்துப் பேர் இயக்கத்தில் இணைந்து போராட தாமாகவே முன்வந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

# 6 புதிய பொலிஸ் அணி தமிழகத்தில் அமைப்பு

(சென்னை)

தமிழக காவல்துறை, மத்திய அரசின் நிதி உதவியுடன் ஆறு அணிகளைக் கொண்ட புதிய றிசேவ் பொலிஸ் படை ஒன்றை உருவாக்கவுள்ளதாக அறிவித்துள்ளது

நேற்று முன் தினம் சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய தமிழக காவல் துறைத் தலைவர் சிறிபால் இத் தகவலைத் தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், இந்த ஒவ்வொரு அணியிலும் எழுநூறு பொலிஸ்காரர்கள் இருப்பார்கள் என்றும், இப்படையை அமைப்பதற்கான செலவில் பாதியை மானியமாகவும், மீதியை கடனாகவும் மத்திய அரசாங்கம் அளிக்கும் என்றும், மத்திய அரசு கோரும் போது புதிய படையின் மூன்று அணிகளை அனுப்பி வைக்க வேண்டும் என்ற நிபந்தனையில் இந்த உதவி கோரியதாகவும் தெரிவித்தார்.

நவீன ஆயுதங்களை கையாள்வதில காவல் துறையின் உதவிக் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் ஆகிய ஐம்பது பேருக்கு ஹரியானாவில் உள்ள தேசிய பாதுகாப்பு அக்கடமியில் பயிற்சி அளிக்கப்பட்டதாகவும், மேலும் நாற்பது பேரை இப் பயிற்சிக்கு அனுப்பியுள்ளதாகவும் சிறிபால் தெரிவித்தார்.

பயிற்சி பெற்ற இவர்கள் ஆவடி, மணி முத்தாறு ஆகிய இடங்களில் முகாம் அமைத்து இரண்டாயிரம் காவல் துறை பொலிஸாருக்கு பயிற்சி அளிப்பார்கள் என்றும், அவர்கள் பின்னர் படிப்படியாக அனைத்து காவல் துறை பொலிஸாருக்கும் நவீனரக ஆயுதங்களைக் கையாள்வதற்கான பயிற்சியை அளிப்பார்கள் என்றும் சிறிபால் குறிப்பிட்டார்.

# ஜெயலலிதா மறுப்பு

(சென்னை)

திருச்சி அருகே மத்திய அமைச்சர் சிதம்பரம் தாக்கப்பட்டதாக வெளிவந்த ஏஜென்சிச் செய்திகளை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாமறுத்துள்ளார். இது சம்பந்தமாக அவர் விடுத்திருக்கும் அறிக்கையில் மேலும் இத்தகைய அசம்பாவித சம்பவங்கள் எதுவும் இடம் பெறவில்லையென்றும், மத்திய அமைச்சரின் பாதுகாப்பான பயணத்திற்கு ஏற்பாடு செய்யும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தாம் பணித்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இராணுவம்

கும் இடையில் சிறிலங்கா இராணுவத்தினர் சென்று கொண்டிருந்த வாகனம் மீது புலிகள் ரொக்கட் தாக்குதல் ஒன்றை நடாத்தினர். இத் தாக்குதலினால் வாகனம் தீப்பற்றி எரிந்தது. அதில் சென்ற சகல படையினரும் கொல்லப் பட்டனர்.

இதனைத் தொடர்ந்து கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களை மீட்டெடுப்பதற்காக பலமான குண்டுவீச்சுத் தாக்குதலை சிறிலங்கா விமானப் படை விமானங்கள் அப்பகுதியில் மேற்கொண்டது அத்தோடு ஆனையிறவு, வெற்றிலைக் கேணிப் பகுதியில் இருந்தும் பலத்த எறிகணைத் தாக்குதலும் இடம் பெற்றது

# ஆசிரியர்களுக்கு விசேட வகுப்பு

1990, 1991 ஆம் ஆண்டுகளுக்கு ய ஆசிரிய தராதரப் பத்திர இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்குப் பயன்படும் முகமாக விசேட வகுப்புக்கள் 19-08-91 தொடக்கம் நடைபெறும். இவற்றில் சேர்ந்துகொள்ள விரும்புபவர்கள் 19-08-91 முற்பகல் 9 மணிக்குக் கலாசாலையில் சமுகமளிக்கும்படி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் அறிவிக்கிறார்.

# இந்தியாவில விமான விபத்து 69 பேர் பலி

(கல்கத்தா)

இந்திய ஏயார் லைன்ஸ் விமானம் ஒன்று பயணிகளுடனும், விமானச் சிப்பந்திகளுடனும் இம்பால் விமான நிலையத்திற்கு அருகே நொருங்கி விழுந்தது.

ஒரு குழந்தை உட்பட 63 பயணிகளும், 6 சிப்பந்திகளும் விமானத்தில் இருந்தனர். அவர்கள் அனைவரும் இறந்து விட்டதாக அஞ்சப்படுகிறது.

புலிகளின்

பட்ட இத்தாக்குதலில் கோணேஸ், மகேந்திரன் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளதுடன், ராபேட், ராஜு ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

சைககிள்

வுப் பொருள்களை மூடைக் கணக்கில் கொண்டு வந்தனர்.

இதேவேளை, தேங்காய் எண்ணையை வடபகுதிக்கு கொண்டுவருவதற்கு தாராள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பல பொருள்களுக்கான தடை நீக்கப்பட இருப்பதாக அறியப்படுகிறது இதனால் வடபகுதியில் இதுவரை இருந்து வந்த உணவுப் பொருள்களுக்கான தட்டுப்பாடு நீங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (தி)

விமானப்படையை

ளில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - பொலநறுவை எல்லையில் உள்ள சிங்கபுரம் என்ற கிராமத்தின் ஊடாக மோட்டார் சைக்கிளில் சென்றபோது கடத்தப்பட்டார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இப்பகுதியில் புலிகளின் நடமாட்டம் காணப்படுவதால், புலிகள் இவரைக் கடத்திச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக அப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

உரியதைக்

தடை செய்து மக்களைக் கொல்லாதே! இவை போன்ற கோஷங்கள் நேற்று யாழ். செயலகத்தை சுற்றி நின்ற மக்களால் எழுப்பப்பட்டன. (ச)

11/2 மாத

நேற்று பதினெட்டு லொறிகளில் உணவுப் பொருள்கள் முகாமைச் சென்றடைந்தன இதே வேளை முகாமில் தங்கியுள்ள அகதிகளுக்குத் தேவையான மருந்து வகைகளை தந்துதவுமாறு மேற்படி கழகம் உதவி வழங்கும் நாடுகளிடம் கேட்டுள்ளது சர்வதேச செஞ்சிலுவை சங்கம் இம்முகாமுக்கு வழங்கும் மருந்துகள் பற்றாக்குறையாக இருப்பதே இதற்குக் காரணம் என தெரிய வருகிறது. தி) (ச(

ராணுவ

ந்த பொன்னுத்துரை மனோகரன் (40) என்பவரே மேற்படி விபத்தில் காயமடைந்தவராவார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் தற்போது வவுனியா அரச வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

# ஓய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், காங்கேசன் துறை, ஊர்காவத் துறை, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் (ஸ்ரான்லி வீதி) ஆகிய இலங்கை வங்கிக்கிளைகளில் இன்று காலை 9·00 மணிமுதல் 10·00 மணிவரை ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பணமாக வழங்கப்படும் என்று மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (க)

ஓகஸ்ட்

ஓமந்தை பகுதியிலும் மேற்படி பேரணி ஊர்வலமாகச் சென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடமும், உதவி அரசாங்க அதிபரிடமும இது சம்பந்தமான மகஜர் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்கா அரசின் பொருளாதாரத்தடை, இராணுவ நடவடிக்கை, மற்றும் பொது மக்கள், மாணவர்களை பாதிக்கும் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாகவே இது நடைபெற உள்ளது.

வவுனியா வெகுஜன ஒன்றியத்துடன் இணைந்து வர்த்தக சங்கம், மாதர் சங்கம், பாடசாலை ஆசிரியர்கள் மாணவர் சங்கங்கள், பொது ஸ்தாபனங்கள் இப்பேரணியிலும் அதன்பின் இடம்பெறும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ள உள்ளன.

வர்த்தக

தின் துண்டுப் பிரசுரத்தில் உள்ளது போன்று எமது சங்கத்தின் தீர்மானங்களில் எது வித மாற்றமும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கைது

பெற்றோருக்கு எழுதிய கடிதத்தில் ''தான் நன்கு தேறி வருவதாகவும், தன்னை மீட்க முயற்சிக்கும்படியும்'' பெற்றோரைக் கோரியுள்ளார்.

அவரது குடும்பத்தினர் உபாலியின் விடுதலைக்காக அரசுக்கு நெருக்குதல் கொடுத்து வருவதாக இராணுவ வட்டாரங்கள் கூறின. சிறிலங்கா அரசாங்கம் உபாலியின் விடுதலை சம்பந்தமாக சாவதேச செஞ்சிலுவை வட்டாரங்ளுகடன் பேசிவருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதிகாரப்

யுள்ள ஒரேயொரு பிரச்சினை அதிகாரப் பாவலாக்கம் மட்டுமே. இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா 'துளையில் நடைபெறும் ஜனாதிபதி செயலக நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்ச்சியில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் இந்தப்பிரச்சினையை தீர்வுக்குக் கொண்டுவர சகல நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது இது தொடர்பாக சகல அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் கேட்கப்படும் என்றும் தெரிவித்தார்.

யாழ்.

அனுமதிக்காது பெருந்தொகையான மக்கள் செயலகத்தைச் சுற்றி வளைத்து நின்றனர். அதேசமயம் வானதிரும் கோஷங்களையும் எழுப்பினர்.

வெயில் கொடுமை நேரம் செல்லச்செல்ல அதிகரித்தபோதிலும் மக்கள் அணிதிரள்வதில் எந்த சலிப்புத் தன்மையும் காணப்படவில்லை.

மதியம் பன்னிரண்டு முப்பது மணிவரைக்கும் இந்தப் போராட்டம் நீடித்தது. இறுதியாக தமிழர் நலன் காக்கும் ஒன்றியத்தின் தலைவர் மூன்று அம்சங்கள் அடங்கிய ஒரு மகஜரை அரச அதிபரிடம் சமர்ப்பித்தார்.

அம் மகஜரில் உள்ள மூன்று கோரிக்கைகளும் வருமாறு.

★ வழங்கப்பட்டுவருகின்ற வாராந்த நிவாரணம் முழுமையாக வழங்கப்பட வேண்டும்.

★ நாட்டிலே சுமுகநிலை ஏற்படுத்தப்பட்டு தமிழ் மக்கள் அனைவரும் தத்தமது வீடுகளில் மீளக் குடியேற்றப்பட்டு அமைதியாகவும் வசதியாகவும் தத்தமது தொழிலைச் செய்து வாழக்கூடியநிலை உருவாக்கப்படும் வரைக்கும் சகலருக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்

★ பொருள்கள் மீதானதடை முற்றாக நீக்கப்படவேண்டும். நாட்டின் ஏனைய பகுதி மக்கள் பொருள்களை கொள்வனவு செய்கின்ற விலைக்கு சமமான விலைக்கு எமது தமிழ் மக்களும் அப் பொருள்களை பெறும்படி செய்யப்பட வேண்டும் பொருள்கள் தாராளமாகவும், தரமுள்ளதாகவும் வழங்கப்படவேண்டும்.

மகஜரைப் பெற்றுக் கொண்ட அரச அதிபர் அந்த மகஜரை உடனடியாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பேன் என உறுதி கூறினார்.

இறுதியாக பன்னிரண்டு நாற்பத்தைந்து மணிக்கு அரச அதிபரையும் அதிகாரிகளையும் தொழிலாளர்களையும் செயலத்தில் மக்கள் உள்ளே போக அனுமதித்தனர். (ச)(மு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீது, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.